## 03. மானிடரை மீட்க (கிறிஸ்து உயிர்ப்புப் பாடல்)

இயல்: திரு.ராஜரத்தினம்
இசை: திரு.மார்ட்டின் பிராண்சிஸ்
பாடியவர்: வல்லவன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

### பல்லவி

மானிடரை மீட்கவந்த மன்னர் இயேசு - அன்று
கல்லறையில் புதையுண்டாரே
கல்லறையில் புதையுண்ட அன்பர் இயேசு - மீண்டும்
உயிருடன் எழுந்திட்டாரே.
உயிர்ப்பினை உணர்ந்தோம் புறப்படுவோம்
உயிர்த்ததை உலகில் பரப்பிடுவோம்.
அல்லேலூயா (8)

### சரணம்

1. கடவுளால் ஆகாதது எதுவுமில்லை - இயேசு
மூன்றாம் நாளில் உயிர்த்ததில் சிரமமில்லை
உலகமோ ஆண்டவரை நம்பவில்லை
நம்பி வந்தால் உலகினில் ஏது தொல்லை?
உயிர்ப்பினை உணர்ந்தோம் புறப்படுவோம்
உயிர்த்ததை உலகில் பரப்பிடுவோம்.
அல்லேலூயா (8)

2. உலகினை வென்றவராய் இயேசு வாழ்கிறார் - அன்பில்
எல்லாவித அதிகாரம் கொண்டு ஆள்கிறார்
இயேசுவின்மேல் நம்பிக்கை கொள்கையிலே - கொடும்
வாளோ கொள்ளை நோயோ என்ன செய்யும்?
உயிர்ப்பினை உணர்ந்தோம் புறப்படுவோம்
உயிர்த்ததை உலகில் பரப்பிடுவோம்.
அல்லேலூயா (8)

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Easter 2021)**